341

Registered No. M. 2445.

17 JUL 1931

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்
அருட் கொடையால்.
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற்
கழகத்தினின்று வரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க	சுக்கில ஆண்டு ஆனித்திங்கள் 1929 — ஜூன்.	இதழ் ௬

க. காலத்தின் அருமையும் நமது கடமையும்:—

உ. பஸ்மதாரணம் :—

௩. வீரசைவம் :—

௪. ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீன பீடமும் அதன் பெருமையும் :—

௫. ஸ்ரீபசவேச விஜயம் :—

௬. சிவப்பிரகாச சுவாமிகளும் அவர்நூல்களும்:-

௭. தமிழ்நாட்டு நிகழ்ச்சி :—

பத்திராசிரியர் { வீ. குமாரவீரய்யர்,
'வீரசைவநிலையம்' முசிறி, திருச்சி ஜில்லா

விவேகபாநு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகா சங்கம்.

ஆறுவதாண்டு விழா.

பெருந்தகைமை மிக்க ஐயன்மீர்!

இவ்வருடம் கோடை விடுமுறையில் வழக்கப்படி நடைபெற வேண்டிய மகாசங்கம் சில முக்கியமான ஆலோசனையின்மேல் ஜூலை மாதம் 2-வது வாரத்தில் சனி, ஞாயிறு விடுமுறையில் நடத்துவதாகத் துணிந்து மாற்றப்பெற்றுள்ளது. இலகுவான முறையில் சில மணங்களையும், தீக்ஷைகளையும் செய்துவைக்கவேண்டுமென்பதும், உறுப்பினர்களிற் பெரும்பாலோர் வேற்றூர்க்குச் சென்றிருப்பதால் பாடசாலைத் திறந்த பின்னர் சந்தா வசூலிப்பதற்கு அனுகூலமாகுமெனப் பொறுப்பாளர்களிற் சிலர் தெரிவித்துக்கொண்டதும் மாற்றப்பெற்றதற்குக் காரணங்களாம். ஆதலின் பொறுப்பாளரனைவரும் காரியதரிசிகளும் சந்தாவை வசூலித்து வசூல் தொகையுடன் சென்ற வருடங்களின் கணக்குகளை ஜூன் மாதம் 25-உக்குள் அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். வரவு செலவு முதலிய அறிக்கைகள் சங்கத்திற்குள்ளாகவே ஜூலை மாதத்திய இதழில் வெளியிடப்பெறும். உறுப்பினருள் பொறுப்பாளர்களும் பெரிதும் முயல்வார்களாக. சொற்பொழிவாளர்கள் தாம் பேசத் துணிந்ததை ஜூன்-மீ 20-உக்குள் தெரிவிப்பார்களாக. இவ்வாண்டில் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றக் கருதியிருப்பதால் யாவரும் ஒற்றுமையுடன் ஊக்கங்காட்டி முயலவேண்டுகின்றோம். பெருவளநல்லூர் திருவாளர் சா. வைத்திலிங்கையரவர்கள் இரண்டு மூட்டை அரிசி கொடுப்பதாக ஒப்பியுள்ளார்கள். இதுபோன்ற உதவியை ஏனையோரும் இயன்றவரை செய்யின் மனமுவந்து ஏற்றுக்கொள்ளப்பெறும்.

இங்ஙனம்,

த. காரியதரிசி.

உ

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலயதேசிகசுவாமிகள் அருட்கொடையால்
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற் கழகத்தினின்று
வரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கிலஆண்டு ஆனித்திங்கள் 1929 — ஜூன். | இதழ் கூ

காலத்தின் அருமையும் நமது கடமையும்

பரமசிவ வணக்கம்.

உலகமெனு மோவியங்கள் திகழ்த்து மொரு
படமாகி யொளிக ளெல்லாம்
இலகுபர வொளியாகிச் சச்சிதா
நந்தமா யேக மாகிப்
பலகலைகள் பரப்பிரமம் பரசிவமா
லிங்கமெனப் பகரா நின்ற
திலகநுத லுமைகணவன் திருவடித்தா
மரைவணக்கஞ் செய்து வாழ்வாம்.

17 JUL 1931

வீரசைவ சித்தாந்த சமயாபிமான சீலர்களே!

நமது திங்கள் வெளியீட்டின் 3, 4, 5 இதழ்களில் காலத்தின் அருமையும் நமது கடமையும் என்ற தலைப்பின் கீழ் எழுதப்பெற்ற கட்டுரைப் பொருள்களை ஏற்றுக்கொண்ட நுங்கள் பெருந்தகைமைக்கு இப்பொழுது எழுதப்பெறும் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு பயன்பெறச் செய்தல் சால்புடைத்தாகுமெனக் கருதியே எழுதலாயினேம். காலம் தனதருமையை யுணர்ந்து செயல் செய்வார்க்குத் திருவினை நீங்காது பிணிக்குங் கயிறுமென்றும், தான் அருமைப் பொருளாயிருந்தும் தன்னால் முடிக்கப்பெறாத அருமைச் செயல் வேறொன்றில்லையாமாறு எதனையுஞ் செய்து முடிக்கும் ஆற்ற

லுடையதென்றும் அதன் அருமை பெருமைகளை யுணர்ந்த நாம்,;

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து" என்னும்

அமிழ்தினுமினிய தமிழ்மறைப் பொருளை யாராய்ந்து, 'நாம் கருதிய செயல்மேற் செல்லாதிருக்குங் காலத்து ஓர் கொக்கு நீர் நிலையின் கண் மீன் கவர்தற்கிருக்கும் வழி அது வந்தெய்தும் வரையும் தன்னிருப்பை முன்னறிந்து தப்பிச் செல்லாதிருக்கும் பொருட்டு உயிரில்லாது போன்று அசைவற்றிருத்தல் போல அடங்கியிருந்து, மீன் எய்தியவழி பின் தப்புவதற்கு முன்பே விரைந்து குத்திக் கவர்வது போலக் கருதிய செயல்மேற் செல்லுங்காலம் வாய்த்தவிடத்து விரைந்து செய்து முடிக்க. என்பது இதன் உண்மைப் பொருளென வுணர்ந்து நமது சமய வுண்மையினை வெளியிடுதற்கும், சமூகசேவை செய்தற்கும் ஏற்ற காலம் இதுவே எனத்துணிந்து நமது கடமையை யாற்றுதற்கு நமது உண்மை நூலுள்ளும் நம்மவருள்ளும் பொதிந்து கிடந்த அரும் பெருங் கருத்துக்களையும் செயல்களையும் வெளிப் படுப்போமாக :—

நமது வீரசைவ சித்தாந்த மதம் வேதம், ஆகமம், ஸ்மிருதி, புராணம், இதிகாசம், மீமாஞ்சை, பாஷியம் முதலிய தக்க பிரமாணங்களைக்கொண்டு ஒப்புயர்வற்று விளங்கும் வைதிக மதமாகும். அது வட நாட்டின்கண் தன்னோடு போர்புரிந்து தோல்வியுற்று ஓடிவந்து நிலைபெற்ற சூழ்ச்சியாளரின் வஞ்சகச் செயலால் இத்தமிழ் நாட்டின் கண், புணரியிற் பெருகும் புண்ணியத் தெய்வ நதி போக மீன்ற அப் புண்ணியன் சடையிற் கரந்துறைதல் போலத் தனது பெருமையினை வெளிப்படுத்தாது காலநோக்கி ஒடுங்கி நிற்பதாயிற்று. தமதுண்மைப் பெருமையை யுணராது வஞ்சகச் சூழ்ச்சியாளரின் அடிச்சார்ந்து அவர் கொள்கையை மேற்கொண்டு பெருமையுறலாமெனக் கருதி மயங்கிய நமது உடன்பிறப்பாளராகிய சைவமக்களும் நமது வீர சைவ சித்தாந்த மதவுண்மையைச் சிறிதும் உணராது அகப்புறச்சமயங்களுள் ஒன்றாகிய ஐக்கியவாத சைவமே வீரசைவமென்றும், வீர சைவர்கட்குப் பஞ்சசூதகமில்லையென்றும் இன்னோரன்ன பொய்யான கற்பனைகளைத் தாமாகக் கற்பித்துக்கொண்டு பிறரை மயக்கித் தாமும் மயங்குவாராயினர். இக்காலத்தில் நாஸ்திகந் தலைப்பட ஆஸ்திகம் குன்றுமோவெனச் சிலர் ஐயமும் அச்சமுங் கொள்கின்றனர். உண்மை நிலையில் நிற்பார்க்கு ஐயமும் அச்சமும் நிகழ்தல் இயற்கையாமா? நாஸ்திகம் தலையெடுப்பதெல்லாம் ஆஸ்திகம் உண்மை

நிலையில் நிலைபெறுவதற்கேயாம். இப்பரத கண்டத்தில் பண்டைக் காலந்தொட்டு நம்மவர்தாம் மக்களாகப் பிறந்தார் ஒவ்வொருவரும் கடவுள் வழிபாடு முதலிய உயர் நிலைகளில் சமவுரிமையைப் பெறு தற்கு உரியாரெனத்தங்கொள்கையை நிலைநாட்டிச் சீர்திருத்தஞ் செய்து வந்தவராவர். இந்நாட்டில் வீரசைவர்களில் மாஹேசர் மட்டிலும் தஞ்சமயக் கொள்கையை இதுவரையும் கைவிடாது காத்து வருகின்றனர். கும்பகோணம் பெரிய மடத்தைச் சார்ந்த சிஷ்யர்களாகிய பக்தர்களிற் பெரும்பாலோர் தம் சமயக் கொள்கையைக் கைவிட்டுப் பிறர் மயக்கிற்குட்படுவோராயினர். ஆயினும் இப்பொழுது அன்னாரும் தம் சமயக்கொள்கையை அபிவிருத்தி செய்யப் பெரிதும் முயல்கின்றனர். அவர்க்கு நாமும் நமது மடாதிபதிகளும் வீர சைவ சமயாசார வுண்மைகளை விளக்கிக்காட்டி அன்னாரை உயர்த்தற்குரிய நமது கடமைகளைக் காலங் கருதிச் செய்வோமாக. அடுத்தடுத்துச் சபைகளைக்கூட்டுவோமாக! உண்மை நெறியை வெளியாக்குவோமாக. இறைவன் திருவருளைச் சிந்தித்து இயற்றுவன இன்னே செய்வோமாக! ஒற்றுமையுடன் அரசியலார் தரும் உயர் பதவியைப் பெற உபாயந்தேடுவோமாக.

பஸ்மதாரணம்.

ஆஸ்தான வித்துவான் வே. சிரசி. குருசாந்த சாஸ்திரிகள்.
(பஞ்சாசாரியப் பிரபா பத்திரிகாசிரியர்.)

திரிபுண்டரேன விநாசந்தியா திரிபுண்டரேன விநாஜப:
திரிபுண்டரேன விநாஸ்ராத்தம் ராக்ஷஸம் பரிகீர்த்திதம்.

(பஸ்மம், விபூதி, திருநீறு என்பன ஒரு பொருளைக்குறித்தவைகள்) நெற்றியின்கண் பஸ்மத் திரிபுண்டரதாரணமில்லாமல் செய்யப்படும் சந்தியாவந்தனம், ஜபம், சிரார்த்தம் முதலிய கருமங்களனைத்தும் இராக்ஷச கருமங்களென்று சொல்லப்படும். சுருதி சம்பந்தமான திரிபுண்டரத்தை அந்தந்த மந்திரங்களினால் அந்தந்த அங்கங்களில் தரித்துக்கொண்டு தத்தம் சிவபூஜாதி நித்திய நைமித்திக கருமங்களை அநுட்டிப்பவரெவரோ அவரே எல்லா நன்மைகளும் கைவரப் பெற்றுத் தாம் வழிபடு கடவுளது கருணைக்குப் பாத்திரராகி நிலைபெற்ற புகழுடையராய் வாழ்வாரென்று பிரமாணங்களிருத்தலினால்

சைவ மதங்களுக்கே முக்கிய அடையாளமாகிய வேதோத்தமான பஸ்மம் சைவ மதங்களுள் தலைமைபெற்று விளங்கும் வீரசைவ மதத்தினராகிய ஆண் பெண்பாலரனைவராலும் தரிக்கத் தகுந்த பெருமையையுடையது.

"மூகேமந்த்ரோ ஹ்ருதிதியானம் மஸ்தகே லிங்கதாரணம், சிகாருத்ராக்ஷ பஸ்மானி இதிப்ராஹ்மண லக்ஷணம்."

என்று கௌதம ஸ்மிருதியில் சிவமந்திரம், சிவத்தியானம், சிவலிங்க தாரணம், சிகாதாரணம், உருத்திராக்ஷதாரணம், பஸ்மதாரணம் என்ற ஆறு தருமங்களுள்ளவனே வீரசைப் பிராமணனென்று வீரசைவனது விசேஷ லக்ஷணத்தை விதித்திருப்பதினால் ஆறு தருமங்களுள் பஸ்மதாரணமும் அநுட்டிக்கத் தகுந்த பரம தருமமாகின்றது. **"திரியாயுஷம் ஜமதக்நே"**: என்று ருக்வேதமும், **யேஷஸ பஸ்மஜ்யோதி"**: என்று ஜாபாலோபநிஷத்தும் பஸ்பத்திரிபுண்டரதாரணத்தை விதித்தலினால் பஸ்மதாரணம் சுருதி சம்பந்தமானதேயன்றி அசுருதி சம்பந்தமானதன்று. ஆதலின் **"திரிபுண்டரம் யேவிநிந்தந்தி நிந்தந்தி சிவமேவதே தாரயந்தியு யேபக்தி யாதார யந்தித, மேவதே"** என்றபடி எவர் திரிபுண்டரத்தை நிந்திக்கின்றனரோ அவரே சிவநிந்தகர் என்று கருதப்படுகின்றார். எவர் எப்பொழும் நெற்றியின்கண் தரித்திருக்கின்றனரோ அவரே சிவபெருமான் கருணைக்குப் பாத்திரராகின்றார்.

"ஊர்த்வ புண்ட்ரம் பவேத்ஸாம மத்தியபுண்ட்ரம் யஜுஷிச அத:புண்ட்ரம் ருசஸ்ஸாக்ஷாத் தஸ்மாத்புண்ட்ரம் திரியாயுஷம்" விதிப்படி நெற்றியின்கண் தரிக்கப்பட்ட மூன்று ரேகைகளுள் மேலுள்ள ரேகை சாமவேத ஸ்வரூபம், இடையிலுள்ள ரேகை யஜுர்வேத ஸ்வரூபம், கீழுள்ள ரேகை ருக்வேத ஸ்வரூபம், என்று வீரசைவ சித்தாந்தத்தின்கண் வருணிக்கட்டிருக்கின்றது. பஸ்மதாரணம் என்பது வைதிகக் கிரியையாதலின் பஸ்மத்தைச் சாஸ்திர விதிப்படி தயாரித்து, எங்கெந்த மந்திரங்களினால் எங்கெந்த இடங்களிற் றரிக்கவேண்டுமென்று இலிங்கதாரண வுபதேசகாலத்தில் குருவினால் உபதேசித்தபடி தரித்து, சிவலிங்கபூஜையின்கண் அன்புடையராயிருப்பதே வீரசைவர்களுடைய சிறந்த தருமமாகின்றது. இவ்விதியைக் கடந்து **சாத்விக ஆகாரத்தினால் கடவுள் வடிவ**

மாக விளங்கும் பசுவைப் பூசிக்காமலும், பஸ்ம கல்பத்தை யறி யாமலும் இச்சைப்படி எவன் பஸ்மத்தைச் செய்கின்றானோ அந்த பஸ்மம் லௌகிக பஸ்மம் என்று கருதப்படுமேயன்றி வைதிக பஸ்ம மென்று கருதப்படாது. அந்த பஸ்ம தாரணத்தால் யாதும் பயனில்லை எந்தப்பதார்த்தம் மந்திரத்தால் புனிதமாக்கப்படுகின்றதோ அந்தப் பதார்த்தம் அலௌகிகமென்று கருதப்படும். எது புனிதமாக்கப் படாமலிருக்கின்றதோ அதுவே லௌகிகமென்று சொல்லப்படும். அரிசி கோதுமை முதலிய தானியங்களைப்போல் கடைகளில் விற்கப் படும் பஸ்மம் லௌகிக பதார்த்தங்களுள் ஒன்றெனக் கருதப்படுமே யன்றி வைதிக பஸ்பமாகக் கருதத்தக்கதன்று. இந்தப் பஸ்மத்தைத் தரிப்பதனால் ஆடையணி முதலியனபோல அலங்கார சாதனமே யன்றிப் பாரமார்த்திக சாதனமாகாது. நம்மவர்களில் அநேகர் அவை திக பஸ்மத்தையும் தரிக்கத்தொடங்கி விட்டார்கள். நியமமின்றித் தோன்றியவாறு செய்யப்பட்ட விபூதியை விலைக்கு வாங்கி அதனைத் தூய்மையாக்குவதாகக் கூறிச் சுயகல்பிதஞ்செய்து கொள்வதால் அது புனிதத்தன்மையை யடையாது. இப்பொழுது விதிமுறை தவறி அசாஸ்திரீயவாத பத்ததிகள் வழக்கத்தில் வேரூன்றி நிற்கின்றன. பஸ்மதாரணக்கிரியை முறை பிறழ்ந்து வருவதால் நூல்களில் விதித்த பஸ்ம சுத்திக் கிரமம் குறைந்து வருவதேயன்றி பஸ்மத்திரிபுண்டர தாரணத்தைச் சொல்லும் சித்தாந்த வாக்கியங்களும், சுருதி வாக்கி யங்களும் கடலொலிபோல் பொருளற்றனவாகின்றன. ஆனால், வேண்டுதலின்றிப் பூசப்பட்ட விபூதியினாலும் பசு, பக்ஷி கிடங்களுக் கெல்லாம் முக்தியுண்டென்று இதிகாசங்களிள் கூறப்பட்டிருத்த லினால் லௌகிக பஸ்மத்திற்கும் முக்தி காரணம் சொல்லப்பட்டதா கின்றது கல்ப விதிப்படி செய்யப்பட்ட விபூதிக்கே முக்தியுண் டென்று ஏன் கூறவேண்டுமெனச் சிலர் வாதிக்கின்றனர். அங்ஙனம் வாதிப்பவரெல்லாம் அசாஸ்திர வாசனையுள்ளவரென்றே அறிஞரால் எள்ளப்படுவர். சாஸ்திரங்களில் விதிவாதமென்றும், அர்த்தவாத மென்றும் இரண்டு வாதங்களுள்ளன. ‘சிவ, என்று உச்சரிப்பவர் எவராயினும் அவருடன் உண்பேனென்றும், அவரது துன்பத்தைக் களைவேனென்றுங் கூறும் வாக்கியங்களெல்லாம் அர்த்த வாதங்கள். இதற்கு உண்மையில் பிரமாணங்களில்லை. பரமேஸ்வரனுடைய நாமோச்சாரணத்தின் பெருமையைக் கூறுவதில் கருத்தேயன்றி போஜன சயனாதிகளில் சிறிதும் கருத்தன்று. சிவலிங்கபூஜையைச் செய், சிவலிங்கத்தை யெப்பொழுதும் தரித்திரு. இலிங்க பூஜைக்கு

அங்கமாகின்ற பஸ்மத்தைத் தரித்துக்கொள் என்ற நியமங்களில் யார் நிற்கின்றார்களோ அவரிடமுள்ள பாபங்களெல்லாம் சிங்கத்தைக் கண்ட மான்போல அஞ்சியொழிகின்றன. இவைபோல்வன விதி வாக்கியங்களாகும். விதிவாக்கியங்களெல்லாம் அரசனாணைபோல் வனவாதலின் எவரும் இவற்றைக்கடக்கலாகாது. கடந்தால் அரசன் தண்டிப்பதுபோல் இறைவனால் தண்டிக்கப்படுவர். இதிகாசங்களில் உள்ள கதைகளெல்லாம் ஒன்றினது சிறப்பைப் புனைந்துரைப்பனவே யன்றி உண்மையுரைப்பனவாகா. ஆதலால் அவைதிகத்தைப்பற்றி யனவெல்லாம் அர்த்தவாதமென்று தள்ளி வைதிக பஸ்மத்தில் அன்பு வைத்து வீரசைவ மதஸ்தாபகராகிய ஸ்ரீரேணுகாதி பஞ்சாசாரியர் களால் விதிக்கப்பெற்ற அஷ்டாவரணங்களுளடங்கிய வைதிக பஸ்ம தாரணத்தைச் செய்து கொள்வதனால் "**அஷ்டாவரண சம் பன்ன: பஞ்சாசார பராயண: வைதிகம் கர்மகுர்விதஜ் ஞானைக பலசாதனம்**" என்ற பெரியோர் வாக்கின்படி வைதிகங் களெனப்படும் அஷ்டாவரணக் கிரியைகளை முடிவுறப்பெற்றமையால் சிவபெருமான் கருணைக்குப் பாத்திரராகுக.

வீரசைவம்.

திருவாளர் S ஏகாம்பர அய்யரவர்கள், தமிழ்ப் பண்டிதர்,
பச்சையப்பர் உயர்தர கலாசாலை, காஞ்சீபுரம்.

"வீரசைவம்" என்னும் இப்பத்திரிகையின் மலர் 1, இதழ் 4ல் வீரசைவம் என்னும் சப்தத்துவயத்தின் சம்யோகத்தால் அதன் உண்மைத் தத்துவமுணர்தல் சிறந்த வேறொன்றென வுணர்த்துவான் றொடங்கி, வீரசைவம் என்னும் பதத்தின் தத்துவத்தை நிச்சயித்தறி தற்கு வீரம் + சைவம் = வீரசைவம் எனவும், வீ + ர + சைவம் = வீர சைவம் எனவும் பகுத்துக்கூறுதற்குரிய பலவகைப் பொருள்களிலும் முதற்கண்சைவம் என்பதும் அறியத்தக்கதேயாதலின் அதன் இயல்பு கூறுமுகத்தான் சிவம் என்பது யோகம், ரூடி என்ற பதவிருத்திகளால் சத்து, ஆநந்தம் என்னும் ரூபத்தையும் அதுவே லக்ஷண வாக்கிய கடகமாய் நின்று சித்ரூபத்தையும் விளக்கிக்கொண்டு சச்சிதாநந்த சொரூபமான பரசிவ வஸ்துவைப் பிரதிபாதிக்கின்றதென உணர லுற்றோம்.

இனி, அச்சிவசொரூப லக்ஷணங்களை வேதங்கள் நிஷ்களமாக வும், சகளமாகவும், சகளநிஷ்களமாகவும் கோஷிக்கின்றனவாதலின் அதனை அறிந்துணர்வோமாக.

நிஷ்களம் :—யஜுர்வேதம், தைத்ரியோப நிஷத், ஆனந்தவல்லி 1-வது அநுவாகம் முதல் வாக்கியம் :—"ஸத்யம் க்ஞாந மநந்தம் ப்ரம்ஹ" என்னும் ஸ்ருதியால் மூன்று காலத்திலும் அழிவற்ற தாகவும், ஞானசொரூமாயும், தேசம், காலம், வஸ்து என்னும் மூன்று வித பரிச்சேதங்களற்றதாயும், எல்லாப்பொருள்களையும் தன்னுள் அடக்கும் வல்லமையுள்ளதாயும் என்றும் ; கிருஷ்ண யஜுர்வேதம், தைத்ரீயபாகம் ஸ்வேதாஸ்வேதரோபநிஷத் 6-வது அத்தியாயம் 19 வாக்கியம், "நிஷ்களம் நிஷ்கிரியம் ஸ்ராந்தம், நிரவத்யம் நிரஞ்சனம், அமிருதஸ்ய பரம்ஸேதும், தத்தேந்தநமிவா நலம்." என்னும் ஸ்ருதியால் நிஷ்களமானதும் அசைவற்றதும், மாயா காரியமாகிய சங்கற்ப விகற்பாதி ரூபதோஷமற்றதும். அவித்தை முதலிய சகல தோஷங்கள் (பற்றுக்கள்) அற்றதும் மனுஷ்யானந்த முதல் பிரம்ஹாநந்தம் வரையில் நூறுநூறுகக் கணிக்கப்பட்ட ஸர்வா நந்தங்களுக்கும் எல்லையானதும், தான் பற்றிய காஷ்டத்தை (விறகை) முழுவதும் தகிப்பித்த அக்கினியைப் போல இத்தன்மைத் தென்று சொல்லமுடியாத கதியை யுடையதும் என்றும்; ஸாமவேதம் சாந் தோக்ய உபநிஷத் 7-வது ப்ரபாடகம் 24வது காண்டம், "யத்ரநாந் யத் பஸ்யதி நாந்யச் ச்ருணோதிநாந்யத் விநாஜாதி ஸபூமா, அதயோவை பூமாத தமிருதம்" என்னும் ஸ்ருதியால் இதனால் எந்த ஆத்மஸ்வரூபத்தைப் பார்க்குமளவில் ஏனைய பூத பௌதிக விகாரங்களான யாதொரு வஸ்துக்களுக்கும், கண் காது முதலிய புறக்கரணங்களுக்கும், புத்தி முதலிய அகக்கரணங்களுக்கும், புலப் படுவதில்லையோ? அத்தகைய சர்வேந்திரிய அகோசர சச்சிதானந் தாதி ஐஸ்வர்ய ஸ்வரூபமாயுள்ளதும் என்றும்; மேற்படி 6-வது அநு வாகம் "ஆநந்தோ ப்ரஹ்ஹேதி வ்யஜாநாத்" என்னும் ஸ்ருதி யால் ஏற்றக் குறைவுகளில்லாமல் என்றும் ஒரு தன்மையதாயுள்ள ஆனந்தமயமாயுள்ளதும் என்றும் ; அதர்வண வேதம் முண்டகோப நிஷத் 2-வது முண்டகம் 2-வது கண்டம் 9-வது வாக்கியம், "ஹிரண்யமயே பரேகோஸே விரஜம் ப்ரம்ஹநிஷ்களம தச்சுப்ரம்ஜ்யோதி ஷாம்ஜ்யோதி:" என்னும் ஸ்ருதியால் பொன்

னிறமான ஹிருதய கமலத்திலிருந்து தீபத்தைப்போல் எல்லாப் பொருள்களேயும் விளக்கிச் சாக்ஷி மாத்திரமாய் நிற்பதும், யாதொரு செயற்கையுமில்லாததும், நிர்மல சொரூபமானதும், உலகின்கண் ணுள்ள கடம், படம் முதலிய எல்லாப் பொருள்களேயும், பிரகாசிக் கின்றவைகளான சூரியன், சந்திரன் நக்ஷத்திரங்கள் அக்கினி முத லானவற்றையும், தனது பரஞ்சோதிப் பிரகாசத்தால் பிரகாசிக்கச் செய்வதும் என்றும்; சாமவேதம், கைவல்யோபநிஷத், "அசிந்த்ய மவ்யக்த மநந்தரூபம், ஶ்ரிவம் ப்ரஸ்ராந்த மமிர்தம் ப்ரம்ஹ யோநிம், ததாதி மங்யாந்த விஹீநமேகம், விபும்சிதாநந்தமரூபம் அத்புதம்." என்னும் ஶ்ருதியால் அகக் கரணம், புறக்கரணங்களுக்கு விஷயமாகாததும் முடிவில்லாத சொரூபமுள்ளதும் ஶ்ராந்தமானதும் மோக்ஷ வடிவானதும், மோக்ஷ காரணமாயுள்ளதும், அவ்யத்த முதல் விராடாந்தமான யாவும் தோன்றி நின்றழிவதற்கிடமானதும், ஆதிமத்தியாந்தரகிதமானதும், இரண்டாவதொன்றில்லாததும், எங்கும் நிறைந்துள்ளதும், ஸ்யம் பிரகாச பரமாநந்த வடிவானதும், உருவமற்றதும், சிந்திக்குமளவில் புத்தியாதிகரணங்களே ரூபம், ஸ்பரிசம் முதலிய பாஹ்ய விஷயங் களிலிருந்து இழுத்துச் சந்தோஷமோ! சோகமோ! துக்கமோ என்று பிரித்துச் சொல்ல இயலாத ஸர்வ விலக்ஷணமான விருத்தியை (நிலையை) உண்டுபண்ண வல்லதுமாகிய யாதொரு பரமதத்துவம் (மூன்று காலத்திலும் விகாரத்தை யடையாத பரமார்த்த சொரூபம்) உண்டோ அதுவே திருஸ்யாதிருஸ்ய பூத பௌதிக சமஸ்த வஸ்து விலக்ஷணமான பரமசிவ மென்றுணர்க என்றும்;

சகள நிஷ்களம்:—யஜுர்வேதம், தைத்ரியோபநிஷத், ப்ருகு வல்லி 1-வது அநுவாகம், யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே, யேநஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம் விஸந்தி தத் விஜிஜ்ஞ: ஸஸ்வத ப்ரமஹேதி." என்னும் ஶ்ருதியால் சிருஷ் டிக்குமுன் வெளிப்படாமலிருந்த இச்சராசராத்மகமான பூதபௌதி கப்பிரபஞ்சங்கள் எதனிடத்திலிருந்து வெளிப்படுகின்றதோ அவ்வா று வெளிப்பட்டபொருள்களனைத்தும் தத்தமக்கு விதித்தகாலம்வரை யில் எதனுடைய அம்ஸமாத்திரத்தால் ஜீவித்திருக்கின்றனவோ? பின் னர் (பிரளயாதி காலத்தில்) எதனிடத்தில் லயமடைகின்றனவோ? அதுவே பரசிவமென்று சொல்லப்படுமென்று சொல்லப்படுமாதலின்,

அதையே விசேஷமாக அறியவிரும்புங்கள் என்றும்; கிருஷ்ண யஜுர்வேதம், சுவேதாஸ்வதர உபநிஷத் 3-வது அத்தியாயம் 20வது மந்த்ரம், "அணோரணீயாந் மஹதோமஹீயாந், ஆத்மா குஹாயாம் நிஹிதோஸ்யஜந்தோ:" என்னும் ஸ்ருதியால் அணுவிற்கு அணுவாயும், மஹத்துக்கு மஹத்தாயும் ஆத்மாக்களுடைய ஹிருதய கமலத்தில் சாக்ஷி பூதராயும் விளங்குபவர் எவரோ அவரே பரமசிவம் என்றும்; ஸாமவேதம், சாந்தோக்ய உபநிஷத், 6-வது ப்ரபாடகம் 2-வது கண்டம் 1-வது வாக்கியம், "ஸதேவஸோம்யே தமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்." என்னும் ஸ்ருதியால் ஏ பிரியதரிசன! (கண்ணுக்கினியாய்) சிருஷ்டிக்கு முன்னர் யாதொரு வேறுபாடுமில்லாத உண்மையான பரமசிவமே இருந்தது என்றும், ருக்வேதம், ருக் உபநிஷத் ருக்ப்ரபாடகம், 3-வது வாக்யம், "ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயே யேதிதத்தேஜோஸ்ருஜத." ஸ்ருதியால் அந்த ஏகரூபியான பரமசிவம் தான், உற்பத்தி முதலிய குணங்களையுடைய பற்பல உலகரூபமாகிறேனென்று நினைத்தார். அவரே அக்கினி முதலிய எல்லாப் பூதங்களையும் சிருஷ்டித்தார். கிருஷ்ண யஜுர்வேதம் சுவேதாஸ்வதர உபநிஷத் 3-வது அத்தியாயம் 4-வது மந்த்ரம், யோதேவாநாம் ப்ரபவஸ் சோத்பவஸ்சவிஸ்வாதிகோருத்ரோ மகருஷி: ஹிரண்ய கர்ப்பம் ஜநயா மாஸபூர்வம் ஸநோத்புத்யா ஸ்ருபயா ஸரம்யுநக்து" என்னும் ஸ்ருதியால் சராசரப்ரபஞ்சங்களுக்கெல்லாம் தலைவராயும், உற்பத்திக்குக் காரணராயும், இரக்ஷிப்பதற்குக் காரணராயும், சங்காரத்திற்குக் காரணராயும், சர்வக்ஞராயும், யாவருக்கும் சிரேஷ்டராயுமிருந்து சிருஷ்டிக்குமுன் சமஸ்த சிருஷ்டியாதி காரியநிர்வாகரான இரண்ய கர்ப்பனைச் சிருஷ்டித்தனரோ? அவரே பரமசிவம். அந்தச் சமஸ்தமங்கள காரியான பரமசிவம் நம்மை நல்ல புத்தியோடு சேர்க்கட்டுமென்றும் இங்ஙனம் கோஷிக்கப்படுவதாகிய வேத வாக்கியங்கள் பலப்பலவாக மிளிர்கின்றவைகள் யாவும் எடுத்துக்கூறுதல் கூடாமையின் நிஷ்களமும் சகள நிஷ்களமுமாகவுள்ள சிவசொரூப லக்ஷணங்களுள் சிறந்தசிலவற்றை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளேன்.

இதனால் நாம் அறியக்கிடந்தன யாவையெனின், சிவபரம் பொருளே சச்சிதாநந்த சொரூபமாய் விளங்குகின்றதென்பதூஉம், எங்கும் நிறைந்து எல்லாமறிவதாய் எல்லாம் வல்லதாய் உள்ளதென்பதூஉம், ஆத்மாக்களுடைய ஹிருதய கமலத்திலிருந்து எல்லாப் பொருள்களையும் விளக்கிச் சாக்ஷி மாத்திரையாய் விளங்குகின்றதென்பதூஉம், மோக்ஷ வடிவமானதென்பதூஉம், என்றும் உள்ளதாக விளங்குவதென்பதூஉம். சிருட்டி, திதி, சங்காரம் முதலிய தொழில்களுக்குக் காரணமாகவுள்ளதென்பதூஉம். யாவர்க்கும் இறைவராக உள்ளவரென்பதூஉம் ஆகிய இவைகளேயாம்.

ஸ்ரீ பொம்மபுரம்
சிவஞானபாலய தேசிகராதீன பீடமும் அதன் பெருமையும்.

௨-வது சிவஞானதேசிக சிவாசாரிய சுவாமிகள்.

தர்மகர்த்தத்துவ பரிபாலனம்:—இந்த சிவாசாரிய சுவாமிகளுடைய அற்புதச் செயல்களையும், அறம் வளர்க்கும் ஆட்சித் திறமையையுங் கண்டுணர்ந்த அக்காலத்திய அரசர்கள் பல ஆலயங்களை சுவாமிகளுடைய தர்மபரிபாலன ஆட்சிக்குட்படுத்தி வேண்டிய விளைநிலங்களை மானியமாகக் கொடுத்துள்ளார்கள் என அனுபவத்தாலும் சாசனத்தாலும் பிரபந்தச் செய்யுள்களாலும் தெரியவருகின்றது. இப்பொழுது மயிலம் சுப்பிரமணிய தேவஸ்தான மட்டிலும் இம்மடாலயத்தின் ஆட்சியிலிருந்து வருகின்றது. ஏனைய ஆலயங்கள் நாலைந்து பட்டங்கட்கு முன்னர் எக்காரணத்தினாலோ இம்மடாலயத்தின் ஆட்சியின்றுந் தப்பிப் பிறர் வசமாயின. காஞ்சி, விருத்தாசலம், திருவக்கரை, பெருமுக்கன்மலை, சேயூர், வில்லியநல்லூர் என வழங்கும் வில்வநல்லூர், திருக்கழுக்குன்றம் முதலியவைகள் இம்மடாலயத்தின் ஆட்சியிலிருந்தவைகள். அவற்றுள் வில்லியநல்லூர் என்பது புதுச்சேரிக்கணிமையில் 3 மைல் அளவிலுள்ளது. அவ்வாலயத்தின் பெருமான் பெயர் திருக்காம நாயகர். அவ்வாலயத்தின்

திருவிழாவை முடித்துப் பின்னர் மகா குருபூஜையை முடித்தற்காகப் பொம்மபுரத்திற்குப் பரிவாரங்களுடனும் அடியார் குழாங்களுடனும் எழுந்தருளும் வழக்கம் இருந்ததெனற்கு அடியிற்காணுஞ் செய்யுளும் சான்றாகின்றது. அன்றியும் திருக்காம நாயகர் இரதோற்சவம் நடைபெற்ற இரண்டாம் நாள் வைசாக விசாகத்தில் பொம்மபுரத்தில் மகாகுருபூசை நடக்கும் நிகழ்ச்சித் தொடர்பும் பொருத்தமாகின்றது.

" வென்றிவிடை யினர்திருக் காமநா யகர்திரு
விழாமுற்ற வருண்மாதவர்
வேறுவே றாயதிரு வேடத்தர் நீறுதிமிர்
மேனியினர் வேணிமுடியர்
துன்றிழை மலிந்தகந் தைச்சுவலர் பட்டுமென்
றூசுமணி யாரமணிவார்
சூலப் படைக்கரத் தினர்தனித் தவரருகு
தோகையர்க ளோடுவருவார்
குன்றுறழ் பணைக்கைவெங் கரிசிவிகை யாதிமிசை
கொள்பவ ரியந்தழங்கக்
கோடிநூ றாயிரவர் மகரா லயத்தொடிகல்
கொண்டதோர் செயலதென்னச்
சென்றெதிர் முழங்குபொம் மையபட் டினச்செல்வ
செங்கீரை யாடியருளே.
திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ
செங்கீரை யாடியருளே."

என்பது சிபஞானசுவாமி பிள்ளைத் தமிழ் (செங்கீரைப் பருவம் 2.)

சமயாசாரியர்களால் பாடல்பெற்ற சிவாலயங்களுள் **திருவக்கரை** என்னுந் திருப்பதியும், **காஞ்சிமா நகரமும்** சுவாமிகளுக்கு உறைவிடமாகவும் ஆட்சிக்குட்பட்டனவாகவும் இருந்தன என்றற்கு, இதழ் ச-ல் குறிப்பிட்ட கலம்பகம் ருO-வது செய்யுளும், காஞ்சியுடன் விருத்தாசலமும் சேயூரும் மயிலமும் உறைவிடமாக இருந்தன என்றற்குக் கீழ்வரைந்துள்ள கலம்பகம் சுஎ-வது செய்யுளும் சான்றாகின்றன.

o "சீர்வளர் குவவுத் திண்டோண் மாருதி
யுயிர்தரு மருந்தொன் றுறுதற் பொருட்டு
முழுமணி கொழிக்கும் முகங்கவி ழருவிக்
குன்றமொன் றெடுத்த கொள்கை போலச்
சொற்றிறம் விரித்த சுடர்மணிச் செழுஞ்சூட்
டுரக வேந்த னொருதலை தரிப்பக்
காதல் கூர்ந்து கண்ணகல் ஞாலம்
உச்சிக் கொண்ட **கச்சிப் பதியும்**
எறும்பியுயிர் நீங்கி லெறும்பி யீருரி
போர்த்துப் போகும் **புராதன மலையும்**
ஆன்பாற் கன்றி யளவில்பல் கறிக்கு
மின்சுவை விளையுமென் **சேயூரும்**
கயிலைபோற் சிறந்த **மயிலைமால் வரையும்**
இடங்கொண் டிருந்த வெங்க ணயக."

(சிவ. கலம்பகம்-67)

---

o சிவப்பிரகாச சுவாமிகள் இச்செய்யுளின்கண் காஞ்சி முதலிய நான்கு நகரங்களின் பெருமையைப் பாராட்டியிருக்கும் நயம் ஆராய்வார்க்கு அகமகிழ்ச்சியைத் தரும் என்பதில் ஐயமின்று. ஆயினும் அவற்றுள், "ஆன்பாற் கன்றியளவில் பல்கறிக்கும் இன்சுவை விளையும் என்சேயூரும்' என்ற அடிகட்குப் பொருள் விளங்காது ஆராய்ந்தபொழுது 'சேயூர் என்பது பொம்மயபாளயத்தினின்றும் வடக்கே 20 மைல் அளவில் கடற்கரையிலுள்ளது. அங்கு உப்பளமிருக்கின்றது. ஆன்பால் இயற்கையில் சுவையுடையது. அது உப்பின் கலப்புறின் திரிவுபடும். ஏனைய செயற்கையாற் சுவையுறும் பொருளனைத்தும் உப்பின் கலப்பாலேயே அச்சுவையையடையும். ஆதலின் ஆவின் பாலுக்கல்லது பாகஞ்செய்யப்படும் கறியமுதுகட்கெல்லாம் உருசியைத்தரும் உப்பு விளைதற்கிடமான சேயூர்' எனத் தமது அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் இப்பொழுது பட்டத்திலமர்ந்திருக்கும் பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலைய சுவாமிகள் பொருளுரைத்தமை மிகப்பெரு மகிழ்ச்சியை விளைவிக்கின்றது.

ஸ்ரீபசவேச விஜயம்.

(திருவாளர், G. C. வீரப்பா B.A. L.L.B. அவர்கள் பெங்களூர்.)

வானம் காலந்தாழ்க்காது மழைபெய்து மன்னுயிரைத் தழைத் தோங்கச் செய்வதும், ஞாயிறு முதலிய கோள்கள் தந்தொழிலைச் செய்து இடையறு தியங்கிவருவதும், அந்தரத்தில் அகிலகோடி அண்டங்கள் நிலையின்றி நிற்பதும், ஆழாழி கரையின்றி அடங்கி நிறபதும், கல்லினுள்தேரையும் கருப்பையுள் உயிரும் உணவு பெற்று வாழ்ந்திருப்பதும் பரஞ்சோதியாய் எங்கும் வியாபகமாய் நிற்கும் இறைவனுடைய அருட் செயலாலேயன்றி வேறில்லை. தந்தையாவார் ஒவ்வொருவரும் தம்மக்களைக் காத்தலினும், அவரது வளர்ச்சியையும் ஏற்றத்தையும் நாள்தோறும் நாடுவதிலும், துக்கத்தை ஆற்றுவதிலும் அளவற்ற அன்பும் கவலையும் கொண்டிருப்பதுபோல பரம பிதா வாகிய கடவுளும் மானிடராகிய தம்மக்களது சுகதுக்கங்களைக் கவ னிப்பதில் பெரு நோக்கமுடையராயிருக்கின்றனர். ஆதலின் அவ் விறைவர் தம்மருட் சக்தியால் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனஞ் செய்வதும், உலகம் நிலைகெட்டு நிற்கும்பொழுது சீர்திருத்தஞ் செய் தற்காகத் தம் சந்நிதானத்தில் பணி செய்து நிற்கும் கணத்தலைவர் களை அவதாரஞ் செய்யும்படி அருள் செய்துவருவதும் அப்பெரு மானது பெருங்கருணைத்திறத்தாலேயேயென நாமுணர்தல்வேண்டும்.

பல அறங்கட்கெல்லாம் இருப்பிடமாக விளங்கும் இந்நாட்டின் கண் காலவேறுபாட்டாலும், கலியின் கொடுமையாலும் மக்கள் தமக் கோர் தலைவன் உண்டென்பதையும் தாம் அவர்க்கடிமை யென்பதை யும் அறவே மறந்து தமக்குள் பெரியார் சிறியார் எனப்போராடித் திகைப்புறுகின்ற காலத்தில் கடவுளதாணையால் நீலகண்டர், சங்கரர், இராமாநுஜர், கிரைஸ்துமுதலியபெரியார் உலகில்தோன்றி காலநிலைக் கேற்ப அறங்களை நிலைநாட்டி உபகாரச் செயல்களைச் செய்து வந் திருப்பதை அறிகின்றோமல்லவா ?

முன்னர் 12-ம் நூற்றுண்டில் நாடெங்கும் மதத்துவேஷங்கள் மிகுந்து நின்றன. ஒருவரையொருவர் வெறுத்துப் போராடத்

தொடங்கினர். நாடெங்கும் இன்பநிலையின்றி எங்கும் துன்பமே மலிந்து நின்றன. இதனைப்பொருத நம் பாரதமாதா உலகியலைச் சீர்த்திருத்தஞ் செய்து காத்தற் பொருட்டு இறைவனதருளை யெதிர் பார்த்திருந்தனள். இங்ஙனமிருக்கும் நாளில் விஜாபூர் சில்லாவில் பலவளங்களும் நிறைந்த பாகேவாடி என்னும் நகரின்கண் மாதரசன் என்னும் பெயர்வாய்ந்த நெறியிற்றவருத ஓர் சைவப் பெரியாரும் அவரது மனைவியாராகிய கற்பிற் சிறந்த மாதாம்பிகையாரும் மலரும் மணமும் போலிருந்து இல்லற வாழ்க்கையை இனிது நடாத்தி வந்தனர்.

பிள்ளைப்பேறு கருதி பெரு நோன்பாற்றல்.

மாதரசன் என்பாரும் மாதாம்பிகையென்னும் அவரது மனைவி யாரும் பிள்ளைப்பேறு கருதி நூல்களில் விதித்த பல அறங்களைச் செய்து வந்தனர். மாதரசன் என்பாரோ நெடுநாள் தவங்கிடந்தும் புத்திரப்பேறின்மையால் இவ்வாழ்க்கையில் சிறிதும் பற்றின்றி இறை வனது திருவடியையே பற்ருகப் பற்றி நின்றனர். மாதாம்பிகையாரும் கான்முளையைப்பெருத கவலையால் கண்ணீருங் கம்பலையுமாக இருந்து இரவும் பகலும் கடவுள்சேவையிலேயே காலங்கழிப்பாராயினர்.

ஒருநாள் இருவரும் அடியார்க் கமுதளித்தல் முதலிய அறங் களைச்செய்துமுடித்து வழக்கப்படி உய்யானவனத்தில் உலாவிக்கொ ண்டிருந்தனர். கட்டழகமைந்த இளமதிபோல்வாராகிய பாலர்கள் சிலர் இளநடைபயின்று விளையாடிக்கொண்டு அங்கே வந்தனர். காலமோ இளவேனிற்காலம். புதிதாய் வெடித்த இலைகளின் அழகும் மலர்களின் நறுமணமும் கண்ணையுங் கருத்தையுங்கவர்ந்தன. சூரியன் அப்பொழுதுதான் தன் கோபத்தீயைத் தணித்துத் தன்னிருப்பிட மான மேற்கடற்குள் செல்லப்போவதுபோலிருந்தான். கீழ்க்கடற் கரையின்கண் எங்குமூடிய இருளைப்போக்கி உலகமெங்கும் பேரொ ளியைப் பரப்பி உயிர்கட்கெல்லாம் உணவைக் கொடுக்கவேண்டு மென்ற பெரு நோக்கத்தால் மரஞ்செடி கொடி முதலிய தாவரங் கட்கு வளருஞ் சக்தியைக் கொடுத்துத் தங்கடமையைச் செய்து அமைதியுற்றூர்போற் செல்லும் சூரியனைக் காணும் பேரவாவுடன் சந்திரன் தண்ணென்ற கிரணங்களுடன் தோன்றினன். சூரிய சந்திர கிரணங்களிரண்டுங் ஒன்ருய்ச் சேர்ந்து காணுமிடந்தோறும் ஆனந்தத்தை விளைவித்தன. வடகரையில் நவநவமான வர்ணங்

களோடு கூடிய மேகங்கள் ஆங்காங்கசைந்து கொடுத்துக் கொண்டிருந்த காட்சிகள் கற்பனைக்குள் அடங்காதனவாயிருந்தன.

பொய் சூது பொறாமை முதலிய மாசுபடியாத பரமாத்மாவை யொத்த பரிசுத்த மனதுடைய இளைஞர் மேற்றிசையின் காட்சியைக் கண்டு ஆனந்தங்கொண்டு குதித்துச் சிரித்துக் குலாவி மாதாம்பிகையின் அருகே வந்தனர். எவ்விடத்தும் எப்பொருளினும் ஆனந்தமே நடனமாடின. அவலமும் கவலையும் அவ்விடம் விட்டே அகன்று போயின. ஆனால் மாதரசன் மாதாம்பிகை இருவர்க்கு மாத்திரம் மனம் மகிழ்ச்சியின்றி புண்பட்டதாயிருந்தது. 'மாதரசர் தன தானிய முதலிய அஷ்டைஸ்வரியங்களும் நிறையப்பெற்றவர். யாதொரு குறைவுமில்லாதவர். தன்னகரிலுள்ளார்க்குத் தலைவராய்ப் புகழ் பெற்றுவந்தனர். ஆனால் புத்திரபாக்கியமில்லாத குறைவு அவரது அறிவாற்றலையடிக்கி வெளிப்படுவதாயிருந்தது. அவரது மனைவிக்கோ உலகம் இருள் நிறைந்த அடவியாகக் காணப்பட்டது. அவர் ஒன்றிலும் இச்சையற்றவராய் உயிரினும் பற்றின்றி ஒவ்வொரு நாழிகையையும் ஒவ்வொரு வருடமாகக் கழித்து வந்தனர். அவரது துன்பத்தின் வயப்பட்ட மனமானது குதித்துச் சிரித்து விளையாடிவரும் சிறுவரைக் கண்டவுடன் பரிதியைக்கண்ட பனிபோல் துன்பமனைத்தும் விட்டகல உல்லாசமடைந்தது. அவர் அச்சிறுவர்களை அடங்காத ஆதரத்துடன் எடுத்தணைத்து உச்சிமோந்து ஆனந்தமடைந்தனர். என்றுங் கண்டறியாத இன்பமெய்தினர். ஆனால் மறுகணத்தில் அச்சிறுவர்களோ தாம் கொடுத்த மகிழ்ச்சியைக் கவர்ந்துகொண்டு அம்மாதரசியாரை முன்னிலும் பன்மடங்கு பெருந்துன்பத்திலாழ்த்தி மறைந்து சென்றனர். நேர்த்தியான குளிர்ந்த சூரிய கிரணங்கள் எரியுஞ் சூலப்படைபோலாயின. தேகம் நடுக்குற்றது. மனமுதலிய கரணங்கள் ஒடுங்கப் பேசமுடியாமல் அயர்ந்து கீழே விழுவராயினர். அப்பொழுது அணிமையினின்ற காதலர் தங்கரத்தாலணைத்து அந்தப்புரத்திற் கழைத்துச் சென்று பஞ்சணையில் கிடத்த தோழியர் பல சைத்தியோபசாரங்களைச் செய்து வந்தனர். இரண்டு மணி நேரங் கழித்த பின்னர் திடீரென எழுந்த அம்மையார் கண்ணுற் கண்டாரைக் கையிகந்து திகைத்தாற்போல் வெருண்ட நோக்குடன் மருண்டு நின்றனர். அணிமையில் நின்ற காதலர் தேற்றி நிகழ்ந்ததை வினவினர். தம் காதலரது அன்பொடு கலந்த மொழியைக் கேட்ட

அம்மையார் தங்கணவனுரை நோக்கி அன்ப! அருள் வடிவாக விளங்கிய ஓர் ஜங்கம மூர்த்தியானவர் எதிர்ப்பட்டு புத்திரப்பேற்றைக்குறித்து நந்தீச்சுரவிரதத்தை அனுட்டிப்பாய் என்றனர். அவர்க்குயான் வழிபாடுசெய்து உபசரித்தற்காக எழ அவரைக்காணது திகைக்கின்றேன், என்றனர். பின்னர் அவ்விருவரும் திருவருட்செயலை வியந்து அன்றுமுதல் விதிமுறைதவறுது நந்தீச்சுர விரதத்தைப் பேரன்புடன் அனுட்டித்துவந்தனர். அவரது கற்பும் மனேநிலையும் அன்பும் இறைவற்கு ஏற்புடைத்தாயின. அம்மையார் திருவருட்செயலால் நல்லோரையில் கருவுற்றனர். அன்றுதொட்டு அந்தப்புரத்தில் பேரொளியும் பெருமகிழ்வும் நிறைவுற்றன. மாதாம்பிகையார் கடவுளது அருட்செயலை வியந்து கேட்பதிலும் பெரியார் சரித்திரங்களைப் பேணிப் படிப்பதிலும் சங்கம மூர்த்திகட்கு உபசரித்தலிலும் பேரூக்கமும் பெருமகிழ்வு முடையராய் மிருதுவான கோகிலத்தைப்போலக் காலங்கழித்துவந்தனர்.

நந்தியெம்பெருமானது கருணையால் நாள்தோறும் கருவுற்று வளர்ந்துவர மக்களது அஞ்ஞானவிருளைப்போக்க இளமதி தோன்றினாற்போல் கருவினின்றும் ஓர் பெரியார் இப்புவியில் அவதாரஞ்செய்தனர். ஆனல் பிறந்த இளம்பிறையை மேகபடலம் மூடினாற்போல அக்குழந்தை அழாமலிருக்க பெற்றோர்முதலனைவரும் பெருங்கவலைகொண்டு மந்திரவாதியையும் வைத்தியரையும் வரவழைத்துச் சிகிச்சைகள் செய்தும் பயன்படாமையால் திகைத்துநின்றனர். அப்பொழுது ஓர் ஜங்கமமூர்த்தி குளக்கரையின்கண் இருப்பதாகக் கேள்வியுற்று அவரை வரவழைத்துத் தங்குறையைத் தெரிவித்துக்கொள்ள அப்பெரியார் அக்குழந்தையைக்கண்டு திருநோக்கஞ்செய்து முறுவல்கொண்ட முகத்துடன் பெற்றாரை நோக்கி இம்மகாத்மாவைப்பெற்ற நீவிர் பாக்கியசாலிகளாயினீர் என்று வாழ்த்தி அக்குழந்தையின் நெற்றியில் திருநீறிட்டு இலிங்கதாரணஞ்செய்து 'பசவா' என்று கூப்பிடுக என்று கட்டளையிட்டனர். மாதரசரும் 'பசவா' என்றழைக்க அக்குழந்தை கைகால்களை யாட்டி அழ ஆரம்பித்தது. யாவரும் பெருமகிழ்ச்சியுற்றனர். பின்னர் அப்பெரியார் திடீரெனமறையவெங்குந் தேடிக் காணுமையால் வந்தவர் சிவபெருமானேயெனத் தெளிந்து சங்கமேச ராலயஞ்சென்று அபிஷேக ஆராதனைசெய்து வழிபட்டு குழந்தையின் மெல்லிய குரலோசையால் பெருமகிழ்வுற்று நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாக வளர்த்துவந்தனர்.

சிவப்பிரகாச சுவாமிகளும் அவர் நூல்களும்.

சோணசைலமாலை.

திருவாளர், பண்டிதர் அ. கந்தசாமி பிள்ளை அவர்கள்,
குடந்தை அரசியலார் கல்லூரி விரிவுரையாளர்.

இனி, அப்பர் சுவாமிகளுக்கு அருளிய திறத்தை யொரு பாட்டிற் கூறுகின்றார். இறைவன் உயிர்களையாட்கொண்டருளுந்திறம் அறக்கருணை, மறக்கருணையென இருவகைப்படும். அது :—

அறமலி யிதஞ்செய் வோருக் கநுக்கிர கத்தைச் செய்வன்
மறமலி யகிதஞ் செய்யின் நிக்கிர கத்தை வைப்பன்
(சித்தியார் சூ-ம். 2, 14)

என்னும் உண்மைநூற் பொருளானறியப்படும்.

நம்சைவ சமய பரமாசாரிய மூர்த்திகளுள் சம்பந்தமூர்த்திகளுக்கு அறக்கருணையினால் ஞான அமுது உதவி ஆட்கொண்டருளிய இறைவன் "பண்டுபுரி நற்றவத்துப் பழுதினள விறைவழுவுந், தொண்ட" ராகிய அப்பமூர்த்திகளுக்கு மறக்கருணையினால் சூலை நோய் ஏவி யாட்கொண்டருளினன். இதுவும் இறைவனது பெருங் கருணைத்திறமேயன்றி வேறன்று.

"உடையாய் கூவிப் பணிகொள்ளா தொறுத்தா லொன்றும்
போதுமே"

"நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன்றே வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ"

என மணிவாசகப்பிரானார் திருவாய் மலர்ந்தருளியதும் காண்க.

இதனை,

நிக்கிரகங் கடானும் நேசத்தா லீசன்செய்வன்
அக்கிரமத் தார்குற்ற மடித்துத்தீர்த் தச்சம்பண்ணி
யிக்கிரமத் தினாலே யீண்டற மியற்றிடென்பன்
எக்கிரமத் தினாலும் இறைவன் செயலருளே

யென்றும், என்னும் உண்மைநூல் (சித்தியார் சூ-ம். 2, 15) ஆகிய இலக்கணத்தினாலும்,

பெற்றிடு குரவ ரானோர் பிள்ளைகள் தம்பால் கோயோன்
றுற்றிடிற் பிறரைக் கொண்டும் உறுதுயர் செய்து தீர்ப்பர்
மற்றவர் தம்பால் அன்போ வன்கணோ அதுபோல் நம்பாற்
பற்றிய பவங்கள் தீர்ப்பான் பரமனு மிவைகள் செய்தான்

என்னும் புராணம் (கந்தப்புராணம்) ஆகிய இலக்கியத்தினாலும்அறிக.

இதை யுட்கொண்டு, ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகளும், 'சோணசைலக் கடவுளே! அறக்கருணையா லாட்கோடற்குத் தகுதி யற்ற வென்னை, மறக்கருணையாலேனும் ஆட்கொண்டருள்க' என்பார், அப்பமூர்த்திகளின் சரிதையைக் குறிப்பித்து வேண்டிக்கொள்கின்றனர்.

அது —

யாவுமாம் உமையுண் ணுமூலை முலைப்பாலீந்துபா டச்செயாய் எனினும்
மேவுமா துயர்செய் சூலையேனும் விடுத்துநிற் பாடமோ றருளாய்

என்னும் பாடலாம் (32).

இனி, சுந்தரமூர்த்தி நாயனார்பால் இறைவன் புரிந்த அருட்டிருவிளையாடல் குறிப்பனவற்றில்,

அன்பனை யருளின் நோக்கி அங்கணர் அருளிச் செய்வார்
"முன்பு எனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே
என் பெயர் பித்தனென்றே பாடுவாய்" என்ன நின்ற
வன் பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாடலுற்றார்.

என்றபடி பித்தனென்று பாடுக என்ற இறைவன் ஆணையின்வண்ணம் அவர் "பித்தா பிறைசூடி யெனப் பெரிதாங் திருப்பதிகம்" பாடியருளினமையை

பெண்ணருங் கலமே யமுதமே யெனப் பெண்
பேதையர்ப் புகழ்ந்தவங் திரிவேன்
பண்ணுறுங் தொடர்பிற் பித்தவென்கினு நீ பயன்தர
லறிந்தும் நிற் புகழேன்

என்னும் பாட்டில் (27) கூறுகின்றனர். இக்கருத்து,

தத்தையங் கனையார் தங்கள்மேல்வைத்த தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண் வைத்தவருக் கமருலகளிக்கும் நின்
[பெருமை
பித்தனென் றொருகாற் கூறுவரேனும் பிழைத்தவை பொறுத்தருள்
[செய்யுங்
கைத்தல மடியேன் சென்னிமேல் வைத்த கங்கைகொண்டசோ
[ளேச்சரத்தானே.

என்னும் **கருவூர்த்தேவர் திருவிசைப்பா** விலுங் காணப்படுகிறது

பின்னும், தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்திகளிடத்தில் நட்புரிமைகொண்டு தம்பிரான்(இறைவன்) அவர் திருத்துறையூரிற் பணிந்து பெருமானெழுந்தருளும் இடம் பலவும் புக்கு இறைஞ்சிப் பின், பொற்புலியூர் நிருத்தனுர் திருக்கூத்துக் காண்பதற்கு நினைவுற்று வருபவர், இரவி மேல்கடலிற் செலவணையும் பொழுதணையத் திருவதிகையடைந்து, 'உடைய அரசு உலகுஏத்தும் உழவாரப்படையாளி, கைத்தொண்டு செய்த திருப்பதியாகிய அத்தலத்தினை மிதித்தற்கு அஞ்சி அங்குச் செல்லாதே யருகிலிருந்த **சித்தவடம்** என்னும் மடத்தில் தங்கி யவ்விரவில் தம்புடை சூழ்ந்த பரிசனமுந் துயில் கொள்ள வீரட்டானத்திறைதான் பரிவுடைய மனத்தினராய்ப் பள்ளியமர்ந்தருளுகையில்—முதுவடிவின் மறையவராய் ஒருவருமறியாதபடி அம்மடத்திற் புகுந்து, தம் தோழர் திருமுடிமேல், தம் கால் படும்படி நீட்டிக்கொண்டு தூங்குபவர் நடிக்க, சுந்தரமூர்த்திகளும் 'ஐயா! மறைவரே! என் தலைமேல் உமது கால் படுகிறதே' என்ன, மூப்பின் தளர்ச்சியினால் இது நேர்ந்தது' என்று அவர் இசைய, நம்பியாரூரர், அப்பால் தலை வைத்துத் துயில, முதுமறையோனைப் வந்த

இறைவன், மீளவும் அவர் தலைமேற் காலை நீட்ட, நம்பியாரூரர், என்னைப் பலதரமும் உதைக்கின்றனையே நீ யார்' என்ன, கங்கை சடைக் கரந்தபிரான் 'அறிந்திலையோ' எனக்கரந்த திருவிளையாடலை மற்றொரு பாட்டிற் கூறுகின்றார்.

அது,

மாங்குயின்மிழற்று நாவலூர்ப்புலவன் மறுப்பவும் தலைமிசையிருத்தும் பூங்கழ லடியேன் தலைமிசை யிருத்தப் புகலினுமென்கொல்நீ புரியாய் என்னும், பாடலாம் (47).

(தொடரும்)

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

போம்மபுரம்

ஸ்ரீசிவஞானபாலய சுவாமிகள்

மகா குருபூஜை.

சுக்கில-ஹு வைகாசி-மீ சு-உ (22—5—29) புதவாரம் விசாகத்தில் வழக்கப்படி மாகேசரும் பக்தருமாகிய வீரசைவர்களும் ஏனைய பக்த சிடர்களுமாகப் பலரும் இப்பொழுது பட்டத்திலமர்ந்திருக்கும் ஸ்ரீசுவாமிகளைக் காணிக்கையுடன் வந்து தரிசித்து வணங்கித் திருநீற்றுப் பிரசாதம் பெற்று மகிழ்வடைந்தனர். அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. 12-மணிக்குள் அறுசுவையுண்டியுடன் மாகேசுர பூசை நடைபெற்றது. பிரபுக்களும் ஏழைகளுமாகச் சுமார் 5000க்கு மேற்பட்ட ஜனங்களுக்கு அன்னமளிக்கப்பெற்றது. ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி மயில் வாகனாரூடரா யெழுந்தருளிவர ஸ்ரீசுவாமிகள் வெள்ளிப்பல்லக்கில் பல விருதுகளுடன் உலாப்போந்தருளினார்கள். ஆதீனவித்துவான்களும் பிறரும் தாம் பாடி வந்த பாக்களைப் பாடிப் பொருளுரைத்தனர். சுவாமிகள் முடிவில் வீரசைவம் என்னும் பத்திரிகையை யாவரும் படித்துப் பாராட்டவேண்டுமென்றும், இப்பத்திரிகை நம் சமூகத்திற்குப் பல நன்மைகளை எதிர்காலத்தில் பயக்குமென்றும் பாராட்டியருளினார்கள் வந்தவர்க்கு ஏற்றவாறு சன்மானங்கள் அளிக்கப்பெற்றன. ஊராரனைவரும் ஒற்றுமையுடன் வந்திருந்தமையால் முன்னிலும் இவ்வருடம் கூட்ட மிகுதியாலும் குருபூசை சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீபசவ ஜயந்தி விழாக்கொண்டாட்டம்.

11—5—29ல் நீலகிரி ஜில்லா குன்னூர் தாலூகா காட்டேரியின்கண் காட்டேரி, தொட்டண்ணி சோகத்தொறை, ஓர நன்னிவாசிகளும், வீரசைவ லிங்காயத்தப் பிரமுகர்களும், மகாஜனங்களுமாகக் கூடி ஸ்ரீபசவேச ஜயந்தியின் ஞாபகமாகக் காலையில் வீரமாகேஸ்வர ஆராதனையும், மாலை 6-மணி தொடங்கி 2-மணி வரை வாத்தியங்கள் முழங்க, பாணவேடிக்கைகளுடன் வீரசைவ பக்தஜன பஜனைகோஷ்டி புடைசூழ, வீரசைவ வாலிபச் சங்கத்துத் தொண்டர் படை அணிவகுத்து நிற்க, அலங்கரிக்கப்பெற்ற ஸ்ரீபசவண்ணதேவர் திருவுருவப் படத்தை ஆடம்பரங்களுடன் காட்டேரி ஸ்ரீபசவண்ணர் மடாலயத்தினின்று எழுந்தருளச்செய்து, ஊர்வலமாகவர, 'வீரசைவர் மனைகள்தோறும் நிவேதனஞ்செய்து பூசிக்க, சிறப்புகளுடன் ஆலயத்தின்கண் சேர்க்கை சேர்ப்பித்தனர். சில அறிஞர் பசவண்ணர் பெருமையைப்பற்றி கன்னடத்தில் உபந்நியசித்தனர். திருவிழா செவ்வனே நடைபெற்றது. பிரமுகர்களும் மதோத்தரண சிகாமணிகளுமாகிய திருவாளர் M. மெத்தலிங்கய்யா, சி. ந. லிங்கய்யா, B. K. நஞ்சய்யா, B. மாதய்யா, M. காளய்யா அவர்களுடைய திரவிய சகாயத்தாலும், வீரசைவ வாலிபச் சங்கத்தார் ஊக்கத்தாலும் விழா செவ்வனே நடைபெற்றமை பாராட்டத்தக்கது. சில அறியாமை மிக்க லிங்காயத்தார் நாகரீகமின்மையால் இவ்விழாவின்கண் கலக்காது ஒதுங்கி நின்றமை வருந்தத்தக்கது. யாவர்க்கும் ஸ்ரீபசவண்ணதேவர் அருள்புரிவாராக.

காட்டேரி
17—5—1929

K. தோள்ளய்யா.

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா முன்பணம் :—	...	25—0—0
ஆண்டுச் சந்தா :—	...	2—0—0
மாணவர்கட்கு :—	...	1—8—0
தனியிதழ் :—	....	0—4—0

சந்தாநேயர்கட்கோர் விண்ணப்பம்.

ஐயன்மீர்!

சென்ற மாதத்திய இதழ்களில் சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்புதல்வேண்டுமென வேண்டிக்கொண்டும் சில நேயர்கள் இன்னும் அனுப்பினார்களில்லை. இம்மாதத்திலும் கௌரவ முறையில் அனுப்பப்பெறும் 6-வது இதழையும் பெற்றுக்கொண்டு அயராது சந்தாவை அனுப்பிவைப்பார்களென நேயர்களது பெருந்தகைமை எதிர்பார்க்கப்பெறுகின்றது. 1930-ஆம் ஜனவரித் தொடக்கத்தில் இதனைச் சுலபத்தில் நடத்துவதற்கும், வீரசைவ நூல்களை வேண்டியவாறு வெளியிடுவதற்கும் உதவியாகச் சங்கத்தின் கண்காணிப்பில் ஓர் அச்சுக்கூடம் ஏற்படுத்தப்பெறும். அதற்கு வேண்டுந் தொகையில் பாதித் தொகையைப் பங்குத்தொகையாகக் கொடுத்துதவுவதாக பொம்மபுரம் 18-வது பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் சந்நிதானம் வாக்களித்துள்ளார்கள். பங்குத் தொகைக்கு வட்டி கொடுக்கப்பெறும். இதற்குப் புலிசை ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளும் தம்மாலியன்ற வுதவியைச் செய்வதாக வாக்களித்து ஊக்கித்துள்ளார்கள். முருகன் திருவருள் முன்னின்றுதவுக. அடுத்த மாதத்திய இதழ்கள் காலந்தோறும் தக்கவமைப்பில் வெளிவரும்.

பத்திராசிரியர்.

நன்கொடை.

நமது வீரசைவத்திற்கு ஆயுட்சந்தாதாரராகக் கையொப்பமிட்டவர்களில் ஒருவரான நாவகநாயக்கம்பட்டி திருவாளர் S. பொன்னுசாமி ஐயர் அவர்கள் ஆயுட் சந்தா ரூ. 25 இம்மாதம் கொடுத்துள்ளார்கள். அன்னாருக்கம் பாராட்டத்தக்கது. மற்றவர்களும் கூடிய விரைவில் ஆயுட் சந்தாவை அனுப்பிவைப்பார்களாக. ஆயுட் சந்தாத் தொகை மூலதனமாகப் பாங்கியில் கொடுக்கப்பெற்றுள்ளதென்பதை நேயர்கள் அறிவார்களாக. மகா சங்கத்தின் நிதிக்காக வழக்கப்படி ஆதனூர் திரு. பொன்னுசாமி ஐயரவர்கள் விவாகத்தில் ஓதிக்கொடுத்தது ரூ. 2, நாகலாபுரம் திரு. சிங்காரவேலையரவர்கள் விவாகத்தில் ஓதிக்கொடுத்தது ரூ. 2. மேற்கண்ட ரூபாய்கள் அந்தந்த வட்டகைக் காரியதரிசியவர்களிடம் சேர்ப்பிக்கப்பெற்றுள்ளன.